23 காலணா Regd. No. M. 2811.

சுதந்திரச்சங்கு

" சங்கு கொண்டே வெற்றி யூதுவோமே—இதைத்
தாணிக் கெல்லா மெடுத்தோதுவோமே "


வாரம் மும்முறை வெளிவரும்
வருட சந்தா $4\frac{1}{2}$ ரூபா

ACC - No - 10813

ஆசிரியர் :
சங்கு. ஸுப்ரஹ்மணியன்.

போன் நெ. 8088 பைக்ராப்ட்ஸ் சாலை, திருவல்லிக்கேணி, சென்னை. வியாழன் 23-3-33

மணலைப் பிழிந்தால்—



Courtesy of "Hindustan Times"

வட்ட மேஜை மகாநாடு என்ற ஆலையில் மணலைக் கோட்டி ஸாமுயேல் ஹோரும் மாக்டனால்டும் பிழி பிழி யென்று பிழிந்தார்கள். 'ரஸம் விழும்! விழும்!' என்று ஸாப்ரூ, ஜயகர், கேல்கர் கோஷ்டி ஆவலோடு காத்துக்கொண்டிருந்தது வெள்ளைக் கடுதாசி தினத்தை எதிர் பார்த்துக் கொண்டிருந்தார்கள். கடைசியில் அந்தத் தினம் வந்தது! நாவைத் தட்டிக் கொண்டு மிதவாதிகள் பாத்திரத்தை குனிந்து பார்த்தனர். கடைசியில் மண் தான் கிடைத்தது! இதைப் பார்த்த சர்ச்சில் ஏன் ஷோக்காக சுருட்டுப் பிடிக்க மாட்டான்?

'நாம்கே வாஸ்தே'

பிரிட்டிஷ் ராஜதந்திரங்கள் ஒவ்வொன்ருக வெளி வந்து கொண்டிருக்கின்றன. வட்ட மேஜையின் குட்டு, வெள்ளைக் கடுதாசியின் வண்டவாளம் யாவும் வெளிப்பட்டதுபோல இப்போது கூட்டுப் பார்லிமெண்டு கமிட்டியின் யோக்யதையும் வெளிப்பட்டு விட்டது. பார்லி மெண்டில் மேஜர் அட்லி கேட்ட கேள்விக்குப் பதிலளிக்கும் போது ஸாமுயேல் ஹோர் பின் வருமாறு கூறியிருக்கிருர்.

"கூட்டுக் கமிட்டியுடன் கலந்தாலோசிக்க வரும் இந்தியப் பிரதிநிதிகள் பார்லிமெண்டு மெம்பர்களல்ல வாதலால் அவர்களுக்கு வோட் செய்யவோ, யாதாஸ்தில் கை யொப்ப மிடவோ அதிகார மிருக்காது" என்று ஹோர் கூறியதில் விஷயம் வெட்ட வெளிச்சமாகி விட்டது.

கூட்டுப் பார்லிமெண்டு கமிட்டிக்கு சிமைக்கு போகப்போகும் இந்தியர்கள், ஸர். ஸி. பி. ராமஸ்வாமி அய்யருள்பட, அத்தனை பேரும் சுத்த 'நாம்கே வாஸ்தே' பேர்வழிகள் என்று இந்தியக் காரியதரிசியே சொல்லி விட்டார். இந்த அவமானகரமான வேலைக்கு, கேவலம் யாத்திரை இன்பத்தை மட்டும் சர்க்கார் செல வில் அனுபவிக்க, மானமுள்ள இந்தியன் புறப் படலாமா? ஸர் ஸாப்ரூ பதில் சொல்லட்டும்! திலக மகாரிஷியின் புனிதப் பெயருக்கு மாசு பூசிக் கொண்டிருக்கும் கேல்கர் பதில் கூறட் டும்!

தேசத்தைக் காட்டிக் கொடுத்துக் காட்டிக் கொடுத்து இதுவரை பாழ்செய்தது போதாதா? வெறுமனே களிமண் பொம்மைகள் போல சிமையில் போய்க் குந்திக் கிடந்து, கைகாட்டி மரங்களைப் போல கையைத் தூக்கி விட்டு வர வேண்டுமா? இந்த நெருக்கடியான சமயத்தில் ஒரு கைக் கூழுக்காக தேசத்தைக் காட்டிக் கொடுப்பவர்கள் இகலோகத்திலும் பரலோகத் திலும் பதிற் சொல்ல வேண்டு மென்பதை ஞாபகப் படுத்துகின்ருேம்.

மகாத்மாவும் வெள்ளைக் கடுதாசியும்

மகாத்மாவுக்கு "வெள்ளைக் கடுதாசி" அனுப் பப் படவில்லையாம். ஆனல் காந்திஜி விரும்பி ஞல் அனுப்பப்படும் என்று டெல்லி சபையில் ஒரு கேள்விக்குப் பதில் கூறப்பட்டது.

சோதனை! வீடெல்லாம் சோதனை! நாடெங்கும் சோதனை

திடீரென்று சென்னை மாகாணப் போலீ சாருக்கு என்ன வேகம்! எத்தனை வீடுகளில் புகுந்து சோதனை! என்ன அட்டகாசம்! சென்ற பதினேழாம் தேதியன்று திருச்சியில் தலைவர் ராஜன் வீட்டிலும், டாக்டர் சாஸ்திரிகள் கிரு ஹத்திலும், அன்பர் ஹாலாஸ்யத்தின் இல்லத் திலும் புகுந்து போலீசார் சோதனை போட் டார்கள். எதற்காகவோ? யார் உத்தரவோ?

அதே மாதிரி மதுரையில் ஸ்ரீமதி ஐயம்மாள், கிருஷ்ண குந்து, சீனிவாஸ வரதய்யங்கார் முத லிய பலர் வீட்டிலும் சோதனை நடந்ததாம். சேலத்திலும் நண்பர் அனந்தாச்சாரியார், பூபதி, பவானி சிங், டாக்டர் துவாரகநாத் முதலிய பல ருடைய வீடுகளிலும் சோதனை போடப் பட்ட தாம். நாமக்கல்லிலும் ராணிப் பேட்டையிலும், திருப்பத்தூரிலும், சென்னையிலும் [பல வீடுகள் சோதனை!

விருதுநகரில் காமராஜ் நாடார் வீட்டிலும், "வெடி குண்டு, துப்பாக்கி முதலிய இருக்கின் றனவா"வென்று பார்க்க போலீஸார் சோதனை யிட்டார்களாம். நண்பர் காமராஜ் அவ்வமயம் ஊரிலில்லை. வேலூர் வீரன் உபயதுல்லா சாகிப் வீட்டிலும் சோதனையாம். இந்த மாதிரி இன் னும் பல இடங்களில் இந்த 'ஸர்ச்' நாடகம் நடந்திருக்கிறதாக நமக்கு செய்தி கிடைத் திருக்கிறது.

இதென்ன சோதனைப் புயல்? திடீரென்று தமிழ் நாட்டில் இவ்வாறு இப் புயல் வீசுவதற்கு என்ன காரணம்? ஒருவன் காங்கிரஸ் கொள் கையுடையவனு யிருந்து விட்டால் அவனை சதா ஏதாவது தொந்தரவு செய்து கொண்டே யிருக்க வேண்டுமென்பது போலீஸார் கொள் கையா? அல்லது இத்தகைய சோதனைகளால் தேசபக்தர்களைப் பயமுறுத்திக் கொண்டிருக் கலாமென எண்ணுகிருர்களா? 'மடியில் கன மிருந்தால் தான் வழியில் பயம்' என்பார்கள். இத்தகைய சோதனைகளால் தேச பக்தர்களுக் குக் கவலை யில்லை. ஆனல், இப்படித் திடீ ரென்று போலீசாருக்கு ஏற்பட்ட வேகத்தைக் கண்டு நகைக்க வேண்டி யிருக்கிறது. இத் தகைய சில்லறைத் தொந்தரவுகளைத் தருவதால் சர்க்காரிடம் பயமேற்படுத்தி விடலா மென்று அதிகாரிகள் எண்ணினர்களானல், அதற்குப் பதிலாக சர்க்காரிடம் அதிருப்திதான் அதிக மாகும் என்பதை சென்னை கவர்ன்மெண்டுக்கு அறிவித்துக் கொள்கிருேம்.

டோஸ் டோஸாகத் தருதல்

ஒரு டோஸ் மருந்து கொடுத்த இத்தனை மணி நேரத்துக்குப் பின் இன்னொரு டோஸ் மருந்து தரவேண்டுமென டாக்டர் கட்டளையிட்டுச் செல்கிறார். கொஞ்சம் தவறி அரை மணி கழித்து அடுத்த டோஸைக் கொடுத்து விட்டால் வியாதியஸ்தனுக்கு நோய் அதிகப்பட்டு விடுமே யன்றி குணப்படாது என்பர்.

இந்தியா ஓர் அரசியல் நோயாளி. அதற்கு முன்னே மருந்து கொடுப்பதாக வந்த மிஸ்டர் மாண்டேகு என்ற டாக்டர், 1929ம் வருஷத்தில் அடுத்த டோஸ் மருந்தைத் தரவேண்டுமெனக் கூறிச் சென்றார். 1929ல் எந்த மருந்தும் வரவேயில்லை. 1933ம் வருஷம் வந்த பின்பு தான் அடுத்த டோஸ் மருந்து வந்து சேர்ந்தது. முன்னே தந்த மருந்து மாண்டேகு சீர்திருத்தம்! இப்போது வந்திருக்கும் மருந்து வெள்ளைக் கடுதாசி! விலை நாலணா தானாம்!

போன டோஸ் மருந்தை விடக் காரமாக இந்த டோஸ் மருந்து 'ஜெயில் ஆஸ்பத்திரிகளில் கொடுக்கும் மருந்தைப் போல் இருக்கிறது. அதுவும் காலம் தப்பிக் காலம் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே நோயாளி பாடு திண்டாட்டம் தான். இந்த வெள்ளைக் கடுதாசியைப் பற்றிப் பலர் பலவிதமாக அபிப்பிராயம் தந்திருக்கின்றனர். ஓர் காங்கிரஸ் ஊழியர் கூறுவதாவது:

“இதைக் கண்ட பின்பாவது ஸாப்ரூ ஜயகர்களுக்கு புத்தி வருமென்று நினைக்கிறேன். உத்தியோக வேட்டை யாடிக் கொண்டிருக்கும் குலாம் கோஷ்டி தின்பதற்காக கொஞ்சம் ரொட்டியையும் மீனையும் அதிகமாக இந்தக் கடுதாசி பரிமாறி யிருக்கிறது. இந்தக் கடுதாசியைப் பற்றி ஆராய்ந்து நமது பொழுதை வியர்த்தமாக்கிக் கொள்வதற்கில்லை. ஆகவே இந்தக் கடுதாசியை மறந்து விட்டு ஏதும் நடக்கவில்லையென்று எண்ணிக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன். இந்தியர் தாங்கள் உயிர் வாழ்வதற்காக 'அமுதம்' வேண்டி அலைகின்றார் றார்கள். அதற்குப் பதிலாக இப்போது விஷம் தரப் பட்டிருக்கிறது. நம்மை எப்போதும் அடிமைகளாக வைத்திருக்கவே இந்தக் கடுதாசி சூழ்ச்சி செய்து விட்டது.”

நோயாளி இந்த 'டோஸ்' விஷத்தை விழுங்காதவாறு தடுக்க வேண்டியவர்கள் மிதவாதிகள் தான். தடுப்பார்களா? மாட்டார்களா?

வாயாடிகளுக்கு வாய் மூட்—

சிறைக்குச் செல்லும் காங்கிரஸ் தொண்டர்களனைவரும் கூலிக்குப் பிடிக்கப்பட்ட பேர்வழிகளென சில அதிகாரிகள் சொல்கின்றனர். இதைப் போன்ற அபாண்டம் வேறில்லை யென்பதை உலகமறியும். நிற்க, இந்திய ஸிவில் ஸர்விஸைச் சேர்ந்த ஐரோப்பியர்களையும் இதரர்களையும் எவ்வாறு மதிப்பிடுவது? ஊழியம் செய்ய வேண்டுமென்ற பேரெண்ணங்கள் ததும்பி அவர்கள் இந்த வேலைக்கு வந்தார்களா? அல்லது சந்யாசிகளைப் போல உழைக்க முன் வந்திருக்கிறார்களா? அவ்வாறிருக்குமானால் இந்த அதிகாரவர்க்கம் அதிகச் சம்பளம் வேண்டுமென்று எப்போதும் லபோ திபோவென்று அடித்துக் கொள்வானேன்? அவர்களுடைய அதிகாரத்தில் இம்மியளவு குறைத்து விடுவதென்றாலும் உடனே ஆவேசத்தோடு கூச்சல் போடத் தொடங்கி விடுகிறார்கள். ஆனால் உடனே சம்பளத்தில் ஒரு பகுதியை உயர்த்தி விட்டாலும், படிச் செலவை கொஞ்சம் அதிகமாக்கி விட்டாலும் உடனே மௌனிகளாகி விடுகின்றனர். ஏதும் நடக்காததுபோல தங்கள் வேலையைக் கவனிக்கத் தொடங்கி விடுகின்றனர்.

தேச மக்களின் ஆசையைப் பூர்த்தி செய்வதை விட இந்த உத்தியோகஸ்தர்கள் மனத்தைத் திருப்தி செய்வதே சர்க்காரின் நோக்கம் போலும்! உத்யோகஸ்தர் சம்பளத்தை பழைய படி உயர்த்திவிட்ட இந்த துன்ரத்தனம், வரவர வறுமைக் கடலுள் ஆழ்ந்து கொண்டிருக்கும் வரி செலுத்துவோனுக்கு உதவி செய்யாத காரணம் தானென்ன? இதை யெல்லாம் காணும் போது, 'ராஜ பக்தி புகட்டி வேலை வாங்குவதற்குப் பணம்! பணம்! பணந்தான் சக்தி மிகுந்தது' என்பதை சர்க்கார் உணர்ந்திருக்கிறார்களென்று ஏற்படுகிறது. சம்பளத்தை நிறுத்து! அல்லது சம்பளத்தில் கொஞ்சம் குறை! உடனே கைமேல் பலன்! ரொம்ப ராஜ பக்தர்களென்று போற்றப்படும் இந்த உத்யோக வர்க்கம் சர்க்காருக்கு எதிரிடையாகப் பேசத் தொடங்குவது மன்றி, எதிர்க்கவும் ஆரம்பித்து விடுமன்றோ! —ஸர்ச் லைட்.

அதிகாரி வாலாட்டம்

ஹரித்துவாரத்தில் 'கும்பமேளம்' என்பது பெரிய திருவிழா. அச்சமயத்தில் அங்கு ஒரு சுதேசிக் கண் காட்சியை நடத்துவதென்று அங்குள்ள தேச பக்தர் தீர்மானித்தனர். காட்சி நடத்த இடம் வேண்டி அந்த ஊர் அதிகாரியான மிஸ்டர் 'குக்' என்பாரிடம் விண்ணப்பித்திருந்தனர். 30 ஆயிரம் சதுர அடி விஸ்தீர்ணமுள்ள ஓரிடத்திற்கு, 20 நாளைக்கு, ஆயிரம் ரூபா வாடகை தர வேண்டுமென்று அதிகாரி கோரினார். கொடுத்து ஒழிப்பதாக காட்சியின் காரியதரிசியும் இசைந்தார். ஆனால் அந்த ஒப்பந்தத்தில் மண்ணை வாரிப் போடுவது போல அதிகாரி ஓர் 'கண்டிஷன்' போட்டுக் கடிதம் எழுதினார்.

"காட்சி வைக்கப்படு மிடத்தில் ராஜீய சம்பந்தமான பேச்சுக்களோ, ஊர்வலங்களோ நடக்கலாகாது. எந்த ராஜீயக் கட்சியைச் சேர்ந்த கொடியும் காட்சியில் போடப்படலாகாது. எந்த சமயத்தில் வேண்டுமாயினும் காட்சியைத் திடீரென்று மூடி விட அதிகாரம் எனக்கு உண்டு" என்று அக் கடிதத்தில் கூறினார்.

அதிகார அமுல் என்ற வால் அக் கடிதத்தில் ஆடுகின்ற தல்லவா? ஆகவே காட்சிச் சாலையின் காரியதரிசி இந்தக் 'கண்டிஷன்'களுக்கு ஒப்புக் கொள்ள மனமின்றி பின்வருமாறு பதில் வரைந்தார்.

"தேசத்தில் பற்பல இடங்களில் நடந்த சுதேசிக் காட்சிகளிலும் தேசியக் கொடிகள் போடப்பட்டு வருகின்றன. இந்தக் காட்சியில் மட்டும் தேசியக் கொடி பறப்பதற்கு ஆட்சேபமேனோ? எந்த நிமிஷத்திலும் காட்சியை மூடி விடத் தமக்கு அதிகாரமுண்டு என்று கூறுகின்றதை சுயமரியாதை யுள்ள எங்களால் ஏற்றுக் கொள்ள முடியாது. இதனால் என்ன தெரிகிறதென்றால் சுதேசிக் காட்சி ஏதோ பயங்கரமானதென்றும், ஆகவே அதை ஆதரிக்கலாகாதென்றும் மேற்படி அதிகாரி நினைக்கின்றார் போலும். ஆரம்பத்திலேயே இப்படி அட்சதை போட்டால், பின்னால் என்ன ஆகுமோ? ஆகவே சுதேசிக் காட்சியை நாங்கள் நடத்தப் போவதில்லை".

இப்படியாக அக் கும்பமேளத்தில் சுதேசிக் காட்சியை நிறுத்தி விட்ட புண்ணியத்தை மிஸ்டர் 'குக்' கட்டிக் கொண்டார்.

"பட்ட காலிலே படும்......"

'பட்ட காலிலே படும், கெட்ட குடியே கெடும்' என்ற பழமொழி ஏழை மிராசுதார்கள் விஷயத்தில் மிக்க வாஸ்தவமா யிருக்கிறது. சென்னை மாகாண நிலத் தீர்வையில் ஓர் பகுதியைக் கூட வஜா செய்ய முடியாதென சர்க்கார் சொல்லி விட்டது. ஆனால் ஓர் பகுதி தீர்வையை வசூலிப்பதை ஒத்திப் போட்டிருக்கின்றது. "முன்னொருக்கால் மிராசுதார்கள் லாப மடையவில்லையா? அதனின்று எடுத்துக் கொடுக்கட்டுமே" என்று அதிகாரிகள் சொல்கிறார்களாம்! எக்காலத்திலும் மிராசுதார்கள் கொள்ளை லாபம் அடித்தார்களில்லை. தானியங்களின் விலை வாசி உயர்ந்தது போலவே அவ்வப்போது மிராசுதார்களின் செலவுகளும் கடுமையா யிருந்திருக்கின்றன. கூலி விகிதங்களும் அதிகமா யிருந்திருக்கின்றன. தற்கால விலை வாசியோ அடியோடு படுத்துப் போய் விட்டது. ஆனால் கூலி, மனிதன் சராசரிச் செலவு முதலியனவோ அதிகமாகவே யிருந்து கொண்டிருக்கின்றன. சர்க்காரின் செல்லப் பிள்ளைகளில் ஒருவரான ஸர். குருமா ரெட்டி என்பார் கூட இப்போது சர்க்காரை இவ்விஷயத்தில் கண்டித்திருக்கின்றாரென்றால் இதை விட வேறென்ன அத்தாட்சி வேண்டும்? புல்லா விவசாயிகள் மகா நாட்டில் அவர் பேசிய போது அவர் கொடுத்த சில புள்ளி விவரங்களை அடியில் தருகின்றோம்.

	1914௵த்துக்கு முன்	1929-ம் ௵	1931 ௵ அக்டோபர்	1931௵ டிசம்பர்
தானியங்கள் விற்ற விலை விகிதம்	100	130	67	74
மிராசுதார்கள் விலை கொடுத்து வாங்கிய சாமான்களின் விலை விகிதம்	100	143	127	129
மிராசுதாரின் சராசரி வாழ்க்கைச் செலவு	100	148	108	109

இந்தக் கணக்கைப் பார்த்தால் தானியங்களின் விலை வாசிகள் மட்டும் குறைந்தனவேயன்றி, இதர செலவுகள் குறையவில்லை என்பது தெரிய வரும். இப்படியாக எப்போதும் நஷ்ட மடைந்து கொண்டு வரும் விவசாயிகளிடம் மன மிரங்காத சர்க்காரை என்னென்பது?

சத்தியமே ஜயமளிக்கும்

(மகாத்மா காந்தி)

ஹரி ஜன இயக்கம் அடிப்படையில் மத சம்பந்தமான இயக்கமாகும்; ஹிந்து மதத்தைப் பரிசுத்தப் படுத்தி, அதனைப் பாதுகாப்பதே அதன் நோக்கம். ஆகவே அது சத்தியத்தின் மூலமாகவே நடத்தப்பட வேண்டும். சத்தியமே மதத்தின் அஸ்திவாரம். சத்தியமே கடவுள். அவ்வாறாயின், மதத்தில் அசத்தியத்திற்கு இடமிருக்க முடியாது. ஒவ்வொரு ஹரி ஜன சேவகரும் இந்த அடிப்படையான தத்துவத்தைத் தங்கள் ஹிருதயத்தில் பதித்துக் கொண்டு ஊழியம் செய்ய வேண்டும்.

* * * *

சனாதனிகளின் கட்டுரைகள் என்னிடம் வெள்ளம் போல் வந்து குவிந்து கொண்டிருக்கின்றன. புதிய வாரப் பத்திரிகைகளும், துண்டுப் பிரசுரங்களும் தினந் தினம் வந்து கொண்டிருக்கின்றன. சனாதனிகள் தங்கள் பணப் பையைத் திறந்து விட்டிருக்கிறார்கள். அவர்களுடைய இந்த விழிப்பில் எனக்குச் சந்தோஷமே! ஆனால் இந்த விழிப்பு சரியான வழிகளில் செல்லலாகாதா? அதுதான் இல்லை. அவர்களும் சீர்திருந்த வேண்டும் என்பதே எனது ஆசை. அவர்களுடைய எழுத்துக்களில் பச்சைப் பொய்கள் நிறைந்திருக்கக் காண்கிறேன். எந்த வழியிலாவது தீண்டாமை விலக்கு இயக்கத்தை நிறுத்தி விட வேண்டு மென்ற ஒரே நோக்கந்தான் அவர்களுக் கிருக்கிறது. இத்தகைய பிரசாரத்துக்கு யாரால் பதில் சொல்ல முடியும்?

* * * *

சனாதனிக்கும் சீர்திருத்தக் காரனுக்கும் வித்தியாசம் காணாதிருக்க வேண்டும் என்பதே என் முயற்சி. இருவரிட மிருந்தும் சத்தியத்தையே நான் வேண்டுகிறேன். ஆனால், சனாதனிகள், என்னைத் தங்களுக்குச் சொந்தமானவனென்று மதிக்க மறுக்கிறார்கள். அவர்களுட் சிலர் என்னைத் தங்கள் சத்துரு என்று கூட எண்ணுகிறார்கள். ஆகையால், எனது வேண்டுகோளை அவர்கள் மதிக்க மாட்டார்களோ என்று அஞ்சுகிறேன். சீர்திருத்தக்காரர்கள் என்னுடைய வேண்டுகோளுக்குச் செவி கொடுப்பார்களானால், நான் திருப்தி யடைவேன். ஏனெனில், இருளை ஒளி எவ்வாறு வென்று விடுகின்றதோ அவ்வாறே, அவர்களுடைய சத்தியம் எதிரிகளின் அசத்தியத்தை வென்று விடும். ஆகையால், சத்தியத்தைத் தனக்கு வழி காட்டும் முக்கிய தத்துவமாக வைத்துக் கொண்டு ஹரிஜன சேவகர்கள் தமது ஒவ்வொரு காரியத்தையும் செய்தல் வேண்டும். அவ்வாறு செய்வாரானால், முடிவில் சனாதனியை அவர் மாற்றி விடுவது நிச்சயம்.

* * * *

எனது உபவாசம் எந்த உருவத்திலாவது, வகையிலாவது ஜனங்களைப் பலவந்தப் படுத்த வேண்டும் என்பதற்காக உத்தேசிக்கப்பட்டதன்று. ஹிந்துக்களைச் சிந்தனை புரியச் செய்ய வேண்டும், அவர்களைச் செயல் புரியத் தூண்ட வேண்டும் என்பதற்காக மாத்திரமே அது உத்தேசிக்கப்பட்டது. சத்தியம் மிகக் கடுமையான தன்மை வாய்ந்தது; எந்த உயிர் அல்லது உயிர்களே யாயினும், அவை எவ்வளவு தான் மதிப்புயர்ந்தவையா யிருப்பினும், அவற்றை விட சத்தியத்தையே மேலானதாகக் கொள்ள வேண்டும். கோடிக்கணக்கான உயிர்களைத் தியாகம் செய்ய வேண்டி வந்தாலும், சத்தியமே நிலைக்க வேண்டும். சத்தியமே ஜயமளிக்கும்!

நாஸிக் சத்தியாக்கிரகம்

'நாஸிக்' என்ற பஞ்சவடி க்ஷேத்திரத்தில் காலராமன் கோயிலிருக்கின்றது. அக் கோயிலுக்குள் தரிசனம் செய்ய உரிமை வேண்டுமென்று அந்த ஊர் ஹரிஜனங்கள் வெகு நாளாகக் கிளர்ச்சி செய்து வருகின்றார்கள். முன்னர் அது சம்பந்தமாக அங்கு ஆலயப் பிரவேச சத்தியாக்கிரகம் நடந்தது. "பஞ்சமர்கள் கோயில் பிரவேசம் கேட்கின்றார்களில்லை. காந்தியடிகள் தான் வேணுமென்றே இந்த வம்பைக் கிளப்பி யிருக்கிறார்கள்" என்று சில ஸனாதனிகள் கூறுகின்றனர். தயவு செய்து அந்தப் பேர்வழிகள் பஞ்சவடிக்குச் சென்று பார்க்கட்டும். சத்தியாக்கிரகத்தில் இறங்கப் போகும் ஹரிஜனங்களுக்குள் ஒரு காங்கிரஸ்காரனாவது கிடையாதென்பதை அறிந்து கொள்ளலாம். ஆனால் அந்த கோயில் சத்தியாக்கிரகிகளுக்கு ஓர் வார்த்தை. ஆக்கப் பொறுத்தவர்கள் ஆறப் பொறுக்கலாகாதா? கோயில் பிரவேச விஷயத்தைக் காந்திஜி எடுத்துக்கொண்ட பின்னரும் ஹரிஜனங்கள் சந்தேகப்பட வேண்டுமா? சத்தியாக்கிரக யோசனையை ஷ கூட்டம் சில காலத்துக்கு ஒத்தி வைக்க வேண்டுமென்பது சிலர் அபிப்பிராயம்.

ரா. ஆ. மெ. கோர்ஸ் ஊழல்

ராயல் ஆர்மி மெடிகல் கோர்ஸ் என்பது பிரிட்டிஷ் இராணுவ வைத்தியர்களின் கோஷ்டிக்குப் பெயர். இந்த கோஷ்டியில் மொத்தம் 883 பேர் இப்போது உத்தியோகத்தி லிருக்கின்றனர். அதில் 290 பேரை இந்தியாவில் கொண்டு வந்து தள்ளி யிருக்கிறார்கள். இந்தியாவில் இப்போது ஏதாவது மகா யுத்தம் நடக்கின்றதா? ஏழை இந்தியர்களின் வரிப்பணத்தினின்று ஏராளமான சம்பளங்களை வாங்கிக் கொண்டு இப்படி ஓர் சோம்பேறிக் கூட்டம் இருக்க வேண்டுமா?

இந்த சோப்பேறிக் கோஷ்டியிலுள்ள 290 டாக்டர்களும் இந்தியாவில் என்ன வேலை செய்து கொண்டிருக்கிறார் களென்று கேட்கலாம். ஆங்காங்கு இராணுவ ஆஸ்பத்திரிகளை வைத்துக் கொண்டு இந்தக் கூட்டம் இருந்து வருகிறது. ஏதோ பொழுது போவதற்காக இந்த ஆஸ்பத்திரிகள் ஏற்படுத்தப் பட்டிருக்கின்றன வென்றே சொல்ல வேண்டும்.

உதாரணமாக, கல்கத்தாவில் ஒரு இராணுவ ஆஸ்பத்திரி இருக்கின்றது. அதில் 110 படுக்கைகள் போடப் பட்டிருக்கின்றனவாம். அந்த ஆஸ்பத்திரியில் பதினேழு 'நோயாளிகள்' தான் கிடக்கின்றனராம். அந்தப் பதினேழு பேரும் நோயாளிகள்தானு என்றால் அதுவு மில்லையாம். அவர்களிடம் வியாதி யிருப்பதாகவே தென்படவில்லையாம். ஒருக்காலத்தில் அவர்கள் வியாதியஸ்தர்களா யிருந்ததாகவும் இப்போது உடலைத் தேர்ச்சி செய்து கொள்வதாகவும் சொல்லுகிறார்களாம். இந்தப் பதினேழு பேர்களைக் கவனிப்பதற்காக 5 பக்கா இராணுவ வைத்தியர்கள் கொழுத்த சம்பளங்களை வாங்கிக் கொண்டு குந்தி யிருக்கிறார்க ளென்றும், 'நர்ஸ்' பட்டாளமும் ஒன்று அங்கு உண்டென்றும் தெரிகிறது. இந்த ஊதாரித்தனத்தை இராணுவ இலாகா நிறுத்தலாகாதா?

'கொட்டிலில் நாய் படுத்துக் கொண்டு மாட்டை விரட்டும்' கதையாக இது இருக்கிறது. பிரிட்டிஷ் சர்க்காரால் இந்திய இராணுவத்தைச் சிக்கனமாக நடத்தத் தெரியவில்லை. இராணுவத்தை இந்தியர்களிடம் ஒப்புவித்து விடுங்களேன் என்றால் அதுவும் மாட்டோமென்கிறார்கள். இடையில் ஏழைக் குடியானவன் வரிப்பணம் தண்ணீர் பட்டபாடு பட்டுக் கொண்டிருக்கிறது.

பத்திரிகை உலகத்தில்

பிண்டமே பிரதான மென்று வாழ்ந்து கொண்டிருப்பது மனிதனுக்கு அழகன்று. உடலைப் போஷிக்க உணவு வேண்டியது தான். ஆனல் அதனேடு அறிவைப் போஷிக்கவும் வளர்க்கவும் மனிதன் முயல வேண்டும். நாகரிக வளர்ச்சி பெற்றுள்ள நாடுகளி லெல்லாம் மனிதன் வயிற்றுக்கு அன்றாடம் நாலணு கொடுப்பது போல மூளை யபிவிர்த்திக் கென்று இரண்டணுவாவது செலவிட்டுக் கொண்டிருக்கிறான். ஆனல் துரதிர்ஷ்டமான இந்தியாவிலோ சோறே சொர்க்க மென்று நினைத்து ஸதா வயிற்றுப் பூஜை செய்து கொண்டே மக்கள் அலைகின்றனர். மூளைக்கு உணவு கொடுப்பதைப் பற்றி கவலையே கிடையாது!

மனிதனின் அறிவு வளர்ச்சிக்குப் பத்திரிகைகளும் புத்தகங்களும் அத்தியாவசிய மானவை. பத்திரிகைகளும், புத்தகங்களும் இந்தியாவில் ஒங்காம லிருப்பதற்கு நாட்டின் வறுமை ஒரு முக்கியமான காரணம் தான். ஆனலும் கை நிறையச் சம்பளம் வாங்குபவர்கள் கூட பத்திரிகை வாங்கிப் படிக்காமலும், புத்தகங்களிடம் பிரியம் செலுத்தாமலு மிருந்து வருவது வெட்கக் கேடா யிருக்கிறது.

ஆனல் மேற்கே கானடாவை எடுத்துக் கொள்வோம். அங்கு ஒரு கோடி மக்கள்தான் வசிக்கின்றனர். அங்கு 1609 பத்திரிகைகள் வெளியாகின்றனவாம். ஐக்கிய அமெரிக்காவில் 12 கோடி மக்கள் இருக்கின்றனர். அங்கு 21191 பத்திரிகைகள் விதம் விதமாக வெளி வந்து கொண்டிருக்கின்றன. கிழக்கே சின்னஞ் சிறிய ஜப்பானிலும் 9191 பத்திரிகைகள் வெளியிடப் படுகின்றனவாம். ஆனல் 35 கோடி மக்களுள்ள இந்தியாவிலோ, இன்றைக்குச் சாகலாமா நாளைக்குச் சாகலாமா வென்று ஜோஸ்யம் பார்த்துக் கொண்டு சுமார் 2800 பத்திரிகைகள் தான் வெளியாகின்றன.

சென்ற 1931-32ல் இந்தியாவில் மொத்தம் $15\frac{1}{2}$ ஆயிரம் புத்தகங்கள் தான் வெளியிடப் பட்டனவாம். அதில் பெரும் பகுதியான புத்தகங்கள் பள்ளிக்கூட மாணவர்களுக்கு போடப் பட்ட 'பாடப் புத்தகங்கள்' என்பதைச் சொல்ல வேண்டுவதில்லை. பாடப் புத்தகங்களால் தேச அறிவு வளராது என்பது நிச்சயம்! என்றைக்கு நம்மவருக்கு புத்தி ஏற்படுமோ அன்றைக்குத் தான் நாடு வளர்ச்சி யடைய ஆரம்பிக்கும்.

குசேலன் குறிப்புகள்

விருந்தில் வில்லிங்டன்

ராமபுரி சமஸ்தானத்தில் ஏரோப்ளேன் வந்து நின்றது. வைஸ்ராய் வில்லிங்டன் அதிலிருந்து இறங்கி அந்த சமஸ்தானதிபதியைச் சந்தித்தார். அன்றைக்கு தர்பார் விருந்து நடந்தது. விருந்திற்குப் பிறகு வில்லிங்டன் ஓர் பிரசங்கம் செய்தார்.

"ஹே ராஜனே! நிலத் தீர்வையைத் தாராளமாகத் தாங்கள் வஜா செய்திருப்பதைக் கேள்விப்பட்டு சந்தோஷப் படுகின்றேன். உங்கள் தேசத்து ஏழைகளின் வறுமை நிலையை நன்ருக அறிந்து அதற்கேற்ப தாங்கள் வரியைத் தள்ளிக் கொடுத்தது கேட்டு பரம சந்தோஷம்" என்று பேசினர். ராமபுரி சமஸ்தான வேந்தன் வரி வஜா செய்ததற்கு சந்தோஷப் படுகின்ற வில்லிங்டன் இவரது பிரிட்டிஷ் ஆட்சியில் எந்த ஜில்லாவில் எவ்வளவு வஜா செய்திருக்கிருரென்று கணக்கு காட்டட்டுமென்று சென்னை மாகாண மிராசுதார் கேட்கின்ருன். கப்சப்! பேசாதே! விராட் ரூப வில்லிங்டனிடமா கேள்விகளைக் கேட்பது?

ஹத்தேரி பகர் பெண்கள்!

பெண் பிள்ளைகளுக்கு ஜப்பானில் இராணுவப் பயிற்சி தரப் போகின்ருர்களாம். 35 ஆயிரம் பள்ளிக்கூடச் சிறுமிகளுக்கும் துப்பாக்கிப் பிரயோகம், கவாத்து முதலிய சகல இராணுவ வித்தைகளையும் சொல்லித் தருவதென ஜப்பான் சர்க்கார் முடிவு செய்திருக்கிறதாம். பள்ளிக்கூடங்கள் ஆயுதங்களை வாங்க ஆரம்பித்து விட்டனவாம். கிழக்கு நாடாகிய ஜப்பானில் சில வருஷங்களுக்கு முன்னே கூட பெண்கள் அடிமைகளிலும் கேவலமாக நடத்தப்பட்டு வந்தனர். ஆனல் இப்போதோ இந்தியாவில் காலேஜ் மாணவர்களத்தனை பேருக்கும் இராணுவப் பயிற்சி தரலாகாதாவென்று சர்க்காரைக் கேட்டால் உடனே கையை விரிக்கின்றது. ஜப்பான் தேசத்துப் பெண்களை விட மட்ட ரகமான பேர்வழிகளா இந்திய மாணவர்கள்? ஆண் பிள்ளைகள் பாடே இந்த மாதிரி என்ருல் இந்தியப் பெண்களின் நிலைமையைக் கேட்பானேன்? பெண் என்ருள் கேவலம் காம வஸ்துவாக பாவிக்கப்பட வேண்டுமா? அடுப்பு ஊதுவதையும், பிள்ளை பெற்றுத் தருவதையும் விட அவள் வேறெதற்கும் உலகில் லாயக்கில்லையா? என்றைக்குத்தான் நமது ஜாதி நல்ல புத்தி பெறுமோ, பார்ப்போம்!

கூலியும் எதிர் முச்சும்

நெல்லுக் குத்த வந்த பெண்களுக்கு கூலியும் கொடுத்துவிட்டு எதிர் மூச்சும் போடும் எஜமானிகளுண்டா? இந்த இந்திய துரைத்தனத்தின் போக்கு அந்த மாதிரிதான் இருக்கின்றது. இந்தியாவில் உத்யோகம் பெற்ற வெள்ளைக்கார அதிகாரிகள் தங்கள் நாடாகிய சீமைக்குப் போயிருந்தால் சம்பளப் பணம் 'டாண், டாண்' என்று சீமைக்கு அனுப்பப் படுகிறது. அப்படி அனுப்பப்படும் சம்பளங்களின்மீது இந்திய சர்க்கார் 'வருமான வரி'யை வசூலிப்பதில்லை. சீமைக்குப் போனபின்பு அந்த அதிகாரிகளுக்கு கொம்புகள் முளைத்து விடுகின்றனவா? ஏன் இந்திய சர்க்கார் வருமான வரியை விட்டு விட வேண்டும்? இந்த இனத்தில் இந்திய துரைத்தனம் வருஷா வருஷம் 50 லக்ஷம் ரூபாயை இழந்து வருகின்றதாம். அது மட்டுமன்று. அப்படி வெளி நாட்டுக்கு அனுப்பப்படும் இந்தியப் பணத்தில் ஒவ்வொரு தம்பிடியும் பிற நாட்டிலேயே செலவழிக்கப் படுகின்றதே யன்றி இந்தியாவுக்கு காலணு கூட எந்த விதத்திலும் சேருவதில்லை. இப்படி இரு விதத்திலும் இந்தியா நஷ்ட மடையும்படி துரைத்தனம் விட்டிருப்பது சரியா?

மறதி மகா வீரன்

அடுத்த வீட்டுப் பாட்டி சுத்த அதிகப்பிரசங்கி. அவள் தனது ஞாபக சக்தியைப்பற்றி என்னிடம் 'லெக்சர்' அடித்தாள். "அப்பா எனக்கு எவ்வளவு ஞாபகசக்தி தெரியுமோல்லியோ! ஆனல் மூணே மூணு விஷயம்தான் எனக்கு மறந்து போயிருக்கிறது! மனுசாள் பெயர்கள் மறந்து போகிறது; ஆட்களின் மூஞ்சிகளும் மறந்து போகிறது; மூணுவதாக —என்னவோ சொல்ல வந்தேனே, அது மறந்து போச்சே" என்று சொன்னுள்.

சென்னை மாகாண சர்க்கார், ஸ்டாம்புக் கட்டணத்தைக் குறைப்பதாக வெகு நாளாகச் சொல்லிக் கொண்டே வந்தார்கள். இப்போது சட்ட மெம்பராயுள்ள கிருஷ்ணன் நாயர் கூட குறைக்க வேண்டுமென வற்புறுத்திய காலமுண்டு. ஆனல் அடுத்த வீட்டுப் பாட்டிக்கு எவ்வளவு ஞாபகமோ, அவ்வளவு ஞாபகம் கிருஷ்ணன் நாயருக்கு. அவர் என்ன செய்வார் பாவம்!

பொறுக்கிய புஷ்பங்கள்

சென்னையில் திங்களன்று "வெள்ளைக் கடுதாசி"க்கு விரோதமாக பிரசாரம் செய்து கொண்டு போன 11 தொண்டர்களையும் போலீசார் பிரம்பினால் அடித்துக் கலைத்தனர்.

சென்னை மாகாணத்தில் கடந்த இரண்டு வாரங்களில் 14 பேர்கள் சட்ட மறுப்பு சம்பந்தமாக தண்டனை யடைந்திருப்பதாயும் பிப்ரவரி மாதம் முடிய 1034 பேர் சிறையிலிருக்கிறார்கள் என்றும் தெரிகிறது.

சென்னைச் சட்டசபை காலரிகளில் 16-ந் தேதி சோதித்ததில் ஆறு தோட்டாக்களுடன் ஒரு ரிவால்வர் அகப்பட்டதாக உஸ்மான் சட்டசபையில் தெரிவித்தார்.

சேலம் நாமக்கல் சர்வாதிகாரி எம். டி. இராமாநுஜத்துக்கு கிரிமினல் லா சட்டப்படி 18 மாதம் கடுங் காவல்.

கள்ளிக்கோட்டையில் சுத்த வெள்ளைக் காகிதத்தை "வெள்ளைக் கடுதாசி" என்று சில தொண்டர்கள் வினியோகம் செய்ததற்காக அவர்களில் இருவர் கைதி செய்யப்பட்டு மறுநாள் விடுவிக்கப்பட்டனர்.

கண்ணனூரில் "யூனியன் ஜாக்" கொடியைக் கொளுத்தி, ஊர்வலம் நடத்திச் சென்று கொண்டிருந்தபோது போலீசாரால் கலைக்கப்பட்டு பிரம்படி கொடுக்கப்பட்டதில் பலருக்குக் காயம். 17 பேர் கைது செய்யப்பட்டனர்.

குண்டூர் 'ஸ்திரீகள் சர்வாதிகாரி' மகா நாட்டின்போது கைதியான 10 ஸ்திரீகளுக்கும் கிரிமினல் லா சட்டப்படி தலா 10 மாதம்.

பெஜவாடாவில் காதி வஸ்திராலயமும் மாதவ ராவ் என்பவரின் வீடும் சோதனையிடப்பட்டது. ஒன்றும் அகப்படவில்லை.

மசூலிப்பட்டணத்தில் டாக்டர் பட்டாபி சிதாராமய்யா முதலிய பல காங்கிரஸ்காரர்களின் வீடுகள் போலீசாரால் சோதனை யிடப்பட்டதாம்.

அலகாபாத் கதர் வஸ்திராலயம் காங்கிரஸ் காரியங்களுக்கு உபயோகிக்கப்பட்டு வருவதாக சந்தேகித்து ஸ்ரீமான் பருச்சாவுக்கு சர்க்கார் ஒரு எச்சரிக்கை அனுப்பி யிருக்கிறார்கள்.

கல்கத்தாவில் கூட விருக்கும் காங்கிரஸ் மகா சபைக்கு பண்டித மதன்மோகன மாளவியா தலைமை வகிப்பார் எனத் தெரிகிறது.

"கவர்ன்மெண்டு அறிக்கையை விட முக்கியமான ஒன்றில் எனது கவனம் செலுத்தப்பட்டு வருவதால் அந்த அறிக்கையைப்பற்றி ஒன்றும் சொல்ல முடியாது" என்று காங்கிரஸ் ஆக்டிங் தலைவர் சொல்லி விட்டார்.

பம்பாயில் போலீசார் ஒரு வீட்டைச் சோதனையிட்டு இரண்டு பேர்களைக் கைது செய்து, காங்கிரஸ் புலட்டின் தயார் செய்யும் சைக்ளோஸ்டைல் மெஷின் ஒன்றையும் கைப்பற்றினர்.

பம்பாயில் ஒரு மாஜிஸ்டிரேட் முன் காங்கிரஸ் ஊழியரின் வழக்கு விசாரணைக்கு வந்த போது 7000 காங்கிரஸ் புல்லிட்டின்கள் ஆஜர் செய்யப்பட்டனவாம்.

கல்கத்தாவில் ஊர்வலங்கள் நடத்தியதற்காகவும், துண்டுப் பிரசுரங்கள் வழங்கியதற்காகவும் மூவருக்கு தலா 3 மாதம் கடுங் காவல்.

வங்காள மாகாண காங்கிரஸ் சர்வாதிகாரியான ஸ்ரீமதி சுகிதி தாஸ்குப்தா என்பவருக்கு 3 மாதம் கடுங்காவல்.

கராச்சியில் இரண்டு காங்கிரஸ்காரர்களுக்கு கிரிமினல் லா சட்டப்படி தலா 6 மாதம்.

டில்லி பெண்பாடசாலை உபாத்தியாயினி ஸ்ரீமதி ஸரஸ்வதி தேவி 24 மணி நேரத்தில் டில்லியை விட்டுப் போகவேண்டுமென்று சர்க்கார் உத்திரவு போட்டிருக்கிறது.

நவாப்கஞ்சில் எட்டாவது முறை 144 பிரயோகம் செய்யப்பட்டிருக்கிறது.

18-ம் தேதியோடு முடிவான வாரத்தில் பம்பாய் துறைமுகத்தி லிருந்து இந்திய தங்கம் வெளி நாட்டுக்குச் சென்றதன் மதிப்பு ரூ. 99 லக்ஷத்து 14 ஆயிரத்து 721.

ஜெஹோலைப் பிடித்ததன் சம்பந்தமாக ஜப்பானியர்களில் 3000 பேர் இறந்தனர் என்றும், 6000 பேருக்குக் காயம் என்றும் ஜப்பானியச் செய்தி கூறுகிறது.

ஜனவரி கிஸ்தி கொடுக்க முடியாததற்காக 200 எஸ்டேட்டுகள் மார்ச்சு 25ல் ஏலத்துக்கு வருகிறதென்று கல்கத்தா செய்தி ஒன்று கூறுகிறது.

Edited and Published by S. Subramanian
and Printed by M. R. Seshan, at the Lunar Printing Press, Triplicane, Madras.